முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்து குறிச்சியிலே கால்நடை மருந்தகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வெப்பம் மிகுந்த கோடை காலத்தில் கால்நடைகளை பராமரிக்க நடமாடும் கால்நடை மருத்துவ நிலையத்தை குறிச்சியிலே அதிக நாள் முகாமிடவைத்து அந்தக் கால்நடைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டத்திற்கு ஒன்று என்று நடமாடும் கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிறது. அதன்மூலமாக உறுப்பினர் குறிப்பிடுகின்ற குறிச்சி மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு மருத்துவம் அளிக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

172—

காகித ஆலை

*__20087__—**திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தினுள் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமானால் மூலதனமாக 1,200 கோடி ரூபாயும், சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பும், ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கரும்புச் சக்கையும், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் டன் அளவு கொண்ட கூழ் மரங்களும், தினந்தோறும் 50 ஆயிரம் கன மீட்டர் தண்ணீரும் வேண்டும் என்பதால் செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தில் வருடத்திற்கு 15,600 டன் கரும்பு சக்கை மட்டுமே இருப்பதால், சாத்தியக்கூறு இல்லை என்றாலும் வேறு தொழிற்சாலைகள் நிறுவ முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கடலூர்—சித்தூர் நெடுஞ்சாலை அருகிலே ஆனைவாரி கிராமம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற 20 மாத காலத்திற்குள்ளாக தமிழகத்திலே பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, 1,40,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கு படித்த இளைஞர்கள் அதிகமாக வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுள் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொன்னாலும், என்னுடைய தொகுதி மக்களும், இளைஞர்களும் அதனை நீண்டநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களுக்காக, அங்குள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே, ஏதாவது ஒரு தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியிலே ஏற்கெனவே சர்க்கரை ஆலைகள் உள்ளன. உறுப்பினர் அவர்கள் அங்கே சர்க்கரை ஆலையில் கிடைக்கின்ற கரும்புச் சக்கையை வைத்து புதிய காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். இப்பொழுது வேறு ஏதாவது தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக தொழில் முனைவோர் முன்வருவார்களானால் அந்தத் தொகுதியிலே தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை அமைக்க தொழில்முனைவோர் முன்வருவார்களென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிந்துரையை ஏற்று அமைக்க முடியும் என்று அறிவித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.